**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்களை கொண்ட தேசிய சர்வதேச ரீதியில் தெரிவு செய்த கலைஞர்களின் கலையாக்கங்களை வெகுசன தொடர்பு சாதனங்களினூடாகக் கண்டறிந்து இரசித்து விமர்சன ரீதியில் தமது சுய ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 6.4 : தெரிவு செய்யப்பட்ட மோடிப்படுத்திய மேடை நாடகமொன்றில் காணப்படும் ஓவியப் பண்புகளை நயத்துரைப்பார்.**

**செயற்பாடு 6.4.1 : மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகமொன்றின் ஓவியப் பண்புகளை நயப்பர்**

**ஒப்படை : பின்வரும் வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்து கீழ்வரும் வினாக்களை உமது பயிற்சிக் கொப்பியில் பிரதி செய்து எழுதுக.**

## விளக்கம்

நாடக தர்மம் உலக தர்மம் என்று நாடகங்கள் இரு வகைப்படும் இவற்றுள் மோடிப்படுத்தப்பட்ட நாடகங்கள் நாடக தர்ம வகைக்குரியன.நாடகத்தின் அனைத்து உரையாடல்களும் பாடல்கள் வடிவில் அமைந்தவையாகவும், இராகத்துடனான உரையாடல்களாகவும் இருக்கும்.அத்துடன் நாடகத்தின் சகல அசைவுகளும், நடைகளும் இசைக்கேற்றவாறு சந்தத்துடன் நடைபெறும்.மனமே, சிங்கபாகு, பெரஹண்ட, போன்ற நாடகங்கள் உதாரணங்களாகக் கூறலாம்.

## பின்னணியை வடிவமைத்தல்

மோடிப்படுத்தப்பட்ட நாடக மேடையின் பின்னணி எளிமையாகவும் அலங்காரமின்றியும் இருக்கும். சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான பின்னணியும் பாடல்களும் பார்வையாளரின் மனதைக் கதையின்பால் ஈர்த்துச் செல்லும்.

## ஒப்பனை

மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களின் ஒப்பனை (வேடம் பூணுதல்) செய்யப்படும். அக்கதாபாத்திரங்களுக்குரிய தன்மை, குண இயல்புகளை வெளிப்படுத்த,

முகத்துக்குச் சாயம் பூசுதல்,
வேறு அடையாளங்களை வரைதல்,
மீசை, தாடி, கேசம் ஆகியவை ஒட்டுதல

என்பன பெரும்பாலும் நடைபெறும் செயல்களாகும்
சிங்கபாகு நாடக்தின் சிங்கத்தின் கதாபாத்திரத்தையும்
மனமே நாடக்தின் வேட அரசனின் கதாபாத்திரத்தையும்
உதாரணங்களாகக் காட்டலாம். .

## அரங்க ஆடையணிகள்

நாடகத்தில் வரும் கதாபாத்திரங்களை மெருகூட்டவும் அவற்றை அழகுபடுத்தவும் ஆடையணிகள் பெரும் பங்காற்றுகின்றன. ஆடைகள், கிரீடம், நெற்றிப்பட்டம், அட்டியல், மாலை, தலைப்பாகை, வளையல்கள், தோடு, மோதிரம், சலங்கை, கொலுசு, சப்பாத்து என்பன இவற்றுள் அடங்கும்.

## அரங்கப்பொருட்கள்

மோடிப்படுத்தப்பட்ட நாடகங்களில் வரும் பலவித கதாபாத்திரங்களில் அதற்கான வகிபாகத்தை திறமையாக வெளிப்படுத்த அரங்கப் பொருள்கள் அத்தியாவசியமாகின்றது. அத்துடன் அவை நாடகத்துக்கு அழகையும் தருகின்றன.வாள், ஈட்டி, இரும்புகோல் எனும் பொருள்கள் இவற்றுள் அடங்கும்.



மனமே நாடகம்





சிங்கபாகு நாடகம்








பெரஹறண்ட நாடகம்

1.மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகம் என்றால் என்ன?

2.மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகமொன்றில் ஒப்பனை செய்யும் விதத்தினை விளக்குக.

3.மோடிப்படுத்தப்பட்ட மேடை நாடகங்களின் ஆடையணிகள், அரங்கப் பொருட்கள் 5 வீதம் எழுதுக.

4.நீங்கள் கண்டறிந்த மேடை நாடகங்கள் 4 குறிப்பிடுக.